சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL
தமிழ் சமுதாயத்தின் குரல்
TAMIL DAILY Rs. 4

Vol:13 ● Issue:202 12.10.2026 ● திங்கள்கிழமை ● சென்னை ● கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● பக்கம் 6 ● விலை ரூ.4





ஆதாரங்கள் அடிப்படையில் வரலாற்று ஆய்வு ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் வலியுறுத்தல்

இணையவழி நிதி மோசடிகளை தடுக்க தமிழக டிஜிபி அறிவுரை

அமைச்சரவையில் இருந்து விசிகவை வெளியேற்ற முயற்சி










## பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவை தொடக்கம்

# பிரதமர் மோடி, முதல்வர் விஜய் தொடங்கி வைத்தனர்

○ ரூ.13 ஆயிரம் கோடிக்கும் அதிகமான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல்

○ ரூ.750 கோடி மதிப்பில் ரயில்வே உள்கட்டமைப்புத் திட்டங்களை பிரதமர் அர்ப்பணித்தார்





**சென்னை, அக்.12:** சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் 4-வது வழித் தடத்தின் ஒரு பகுதியாக பூந்தமல்லி - வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி, முதல்வர் விஜய் இணைந்து கொடியைசத்துத் தொடங்கி வைத்தனர். இதற்காகப் பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் இருந்து தனி விமானத்தில் புறப்பட்டு, இன்று காலை 11 மணியளவில் சென்னை வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்துக்கு வந்தடைந்த பிரதமர் மோடியை, தமிழக ஆளுநர் அர்லேகர், முதல்வர் விஜய் நேரில் சென்று பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும் வரவேற்றனர்.

பிரதமர் மோடி சென்னை விமான நிலையத்தில் இருந்து கார் மூலம் போரூருக்கு சென்ற போது, விமான நிலையத்தில் இருந்து பரங்கிமலை ராணுவ மைதானம் வரை ரோடுஷோ மேற்கொண்டார். அப்போது ஏராளமான மக்கள் உற்சாகத்துடன் பிரதமரை வரவேற்று 'மோடி... மோடி...' என்று ஆர்ப்பணித்தனர்.

போரூர் வந்தடைந்த பிரதமர் மோடி, பூந்தமல்லி - வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் சேவையை தொடங்கிவைத்தார். அப்போது தமிழக முதல்வர் விஜய், தமிழக ஆளுநர் ஆர்லேகர், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

அதன்பின்னர், மெட்ரோ ரயிலில் பிரதமர் மோடி, முதல்வர் விஜய் பயணித்தனர். தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பிறகு, பிரதமருடன் இணைந்து பங்கேற்கும் முதல் அரசு நிகழ்ச்சி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

பூந்தமல்லி - வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி, முதல்வர் விஜய் இணைந்து கொடியைசத்துத் தொடங்கி வைத்தனர். சேவையை தொடங்கி வைத்த பிரதமர் கவுன்ட்டரில் டிக்கெட் எடுத்தார். தொடர்ந்து, பிரதமரும், முதல்வரும் மெட்ரோ ரயிலில் ஒன்றாகப் பயணித்தனர்.

பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைத்த பின்னர், போரூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து கார் மூலமாக சென்னை ஐஐடி வளாகத்துக்கு செல்கிறார். பிரதமர் சென்னை ஐ ஐடி வளாகத்தில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோயிலில் தரிசனம் செய்தார். தொடர்ந்து, அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூளை ஆராய்ச்சி மையத்தை திறந்து வைத்தார். ரூ.13 ஆயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து சென்னை ஐ.ஐ.டி.யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடியும், முதல்-அமைச்சர் விஜய்யும் கலந்து கொண்டனர்.

சுமார் ரூ.3,700 கோடி மதிப்பிலான முக்கிய தேசிய நெடுஞ்சாலைத் திட்டங் களுக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

மேலும் ரூ.750 கோடி மதிப்பில் ரயில்வே உள்கட்டமைப்புத் திட்டங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். தமிழகத்தில் கடல்சார் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், சரக்கு கையாளும் திறனை அதிகரிக்கவும் சென்னை துறைமுகத்தில் நான்கு உள்கட்டமைப்புத் திட்டங்களை தொடங்கி வைத்தார்.

பிரதமர், சென்னையில் உள்ள சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மணலி சுத்திகரிப்பு நிலையத்தில் குரூப் 3,4 லூப் ஆயில் பேஸ் ஸ்டாக்ஸ் தி ட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார். ஐஐடி நிகழ்வுகளை முடித்துக் கொண்டு, நந்தம் பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெறும் ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா பள்ளியின் பொன்விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அங்கு விழா மலரை வெளியிட்டு உரையாற்றினார்.

### பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

பிரதமரின் சென்னை வருகையையொட்டி, சென்னை முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## மாநிலங்களை சக்தி படைத்தவையாக மாற்றி தேசத்தை

# சக்திபடைத்தவையாக மாற்ற வேண்டும்: பிரதமர் மோடி

**சென்னை, அக்.12:** சென்னை ஐஐடியில் பிரதமர் மோடி, முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்ற நிகழ்ச்சி தேசிய கீதத்துடன் தொடங்கியது. இரண்டாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. ரூ.13,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி.

நெடுஞ்சாலைகள், ரெயில்வே, துறைமுகங்கள் உள்ளிட்ட துறைகளின் திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார். தொடர்ந்து தமிழ்நாட்டில் சுமார் ரூ.3,700 கோடி மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி. அதனை தொடர்ந்து பிரதமர் மோடி பேசியதாவது:-

சிவபெருமானின் புனித பூமியான தமிழ்நாட்டில் நான் ஜலகண்டேஸ்வரரின் நல்லாசிகளை பெற்றேன். புண்ணிய பூமியான தமிழ்நாட்டில் அனைவருக்கும் நவராத்திரி வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் இருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. இன்றைய நிகழ்ச்சி சரித்திர நிகழ்வாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டுக்கு



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் இன்று. தமிழ்நாட்டு இளைஞர்களுக்குவேலைவாய்ப்பு அதிகம் கிடைக்க உள்ளது. உங்கள் நல்லாசியுடன் எனது 25 ஆண்டு கால மகத்துவமான பயணம் நிறைவடைந்தது.

நான் முதலமைச்சராக இருந்தபோது, தமிழக முதல்-அமைச்சர்களாக பணியாற்றிய கருணாநிதி, ஜெயலலிதா அவர்களுடன் இணைந்து பணியாற்றி உள்ளேன். பிரதமரான பிறகும் ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி, ஸ்டாலின் ஆகியோருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இன்று இதே உறுதியுடன் முதல்-அமைச்சர் விஜய்யுடன் இணைந்து, தமிழக வளர்ச்சியில் கவனம் செலுத்தி கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டின் மக்களுக்கு சேவை புரிய வேண்டும் என்ற எனது உறுதிப்பாடு தொடர்கிறது.

நகர மயமாக்கல் ஒரு சவால் அல்ல, அது ஒரு வாய்ப்பு.

2014ல் 5 நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரெயில் நிலையங்கள் இருந்தன. 25 நகரங்களில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் செயல்படுகின்றன. 2014-ல் மெட்ரோ வலைப்பின்னல் 250 கி.மீ தான் இருந்தது. தற்போது 1,100 கி.மீ வரை உருவாக்கப்பட்டுள்ளது. மெட்ரோ வலைப்பின்னல் விரிவாக்கம் மூலம் அனைவருக்கும் போக்குவரத்து வசதி எளிதாகிறது.

மாநிலங்களை சக்தி படைத்தவையாக மாற்றி, தேசத்தை சக்திபடைத்தவையாக மாற்ற வேண்டும். உள்ளூர் தயாரிப்பு பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் ஊக்குவிக்க வேண்டும். தமிழ்நாட்டில் உற்பத்தி துறையை ஊக்குவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

முதலமைச்சராக இருந்த காரணத்தால் மாநிலங்களின் எதிர்பார்ப்புகளை புரிந்து நான் செயல்படுகிறேன் இவ்வாறு அவர் கூறினார்.

## மைசூரு தசரா விழா கோலாகலமாக தொடங்கியது

**மைசூரு, அக்.12:** கர்நாடக மாநிலம் மைசூருவில் நடைபெறும் தசரா விழா உலகப்புகழ் பெற்றது.

ஆண்டுதோறும் நவராத்திரி முதல் நாளன்று தொடங்கி 9 நாட்களும் தசரா விழா வெகு விமரிசையாக நடைபெறும். 11-ம் நாளில் ஜம்புசவாரி எனப்படும் யானைகள் ஊர்வலம் நடக்கும். அப்போது யானைகள் புடைசூழ ஒரு யானை, உற்சவர் சாமுண்டீஸ்வரி அம்மன் வீற்றிருக்கும் 750 கிலோ எடை கொண்ட தங்க அம்பாரியை சுமந்து கொண்டு கம்பீர நடைபோட்டு செல்லும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான தசரா விழா வழக்கமான பாரம்பரிய நடைமுறைப்படி தொடங்கியது.இதையொட்டி, மைசூரு சாமுண்டி மலையில் உள்ள சாமுண்டீஸ்வரி கோவிலில், சாமுண்டீஸ்வரி அம்மன் அலங்கரிக்கப்பட்ட வெள்ளித்தேரில் எழுந்தருளினார்.

## மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களை மறுபரிசீலனை செய்ய பிரதமருக்கு முதல்வர் விஜய் கோரிக்கை

**சென்னை, அக்.12:** மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களை மறுபரிசீலனை செய்யுமாறு பிரதமருக்கு முதல்வர் விஜய் கோரிக்கை வைத்துள்ளார்.

முன்னதாக, (அக்.11) காலை பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடியும், தமிழக முதல்வர் விஜய்யும் ஒன்றாக இணைந்து கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து மெட்ரோ ரயிலிலும் பயணித்தனர்.

பின்னர் கிண்டியில் சென்னை ஐஐடி வளாகத்தில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோயிலில் பிரதமர், முதல்வர் தரிசனம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து ஐஐடி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு நிகழ்ச்சி தொடங்கியது. தொடர்ந்து பிரதமர் மோடி, ரூ.13 ஆயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். மேலும், நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

பிரதமரை வரவேற்று முதல்வர் விஜய் பேசுகையில், "பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைத்த பிரதமர் மோடிக்கு நன்றி. தமிழ்நாடு பல தொன்மையான பண்பாட்டை உயிர்ப்புடன் வைத்திருக்கும் மாநிலம். அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் சார்ப்பில், தமிழக மக்களின் சார்பில் நான் பிரதமர் மோடியை வரவேற்கின்றேன்.

தமிழகத்தில் நமது அரசு அனைவருக்குமான அரசாக உள்ளது. கல்வி, வேளாண்மை என ஒட்டு மொத்த தமிழக நலனை இலக்காகக் கொண்டு அனைத்து தரப்பினருக்கான அரசாக நமது அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 100 நாட்களுக்கும் மேல் ஆட்சியை நடத்தியிருக்கிறோம். ஊழலற்ற தமிழகத்தை உருவாக்க கடும் சிரத்தையுடன் செயல்பட்டு வருகிறோம்.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு தமிழகம் என்றைக்கும் துணையாக நிற்கும். மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படும்போது அதன் பலன் நேரடியாக மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும் என்பதே நமது அணுகுமுறை. சென்னையின் ளர்ச்சி மட்டுமல்லாமல் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதன் வளர்ச்சியைக் கொண்டு சேர்க்க வேண்டும். அதனால், சென்னை மெட்ரோ 3-ம் கட்ட திட்டம், ஓசூர் - பெங்களூரு திட்டம், கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மறுபரிசீலனை செய்து ஒப்புதல் தர வேண்டுகிறேன். அதேபோல், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடும் மொழியாக அறிவிக்க வேண்டும்." என்று வலியுறுத்தினார்.

சிகரத்தின்
தினத்தென்றல்

## குமாரபுரம் ஊராட்சி மன்ற தலைவர்
# அனிதா பிரின்ஸ்க்கு பாராட்டுவிழா: பொன்னாடை போர்த்தி மரியாதை



**திசையன்விளை, அக்.12:** நெல்லை மாவட்டம் திசை யன்விளை அருகே உள்ள குமாரபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அனிதா பி . பி ரின்ஸ்க்கு பாராட்டு விழாநடைபெற்றது.இவ்விழாவில் ஊராட்சி மன்ற துணை தலைவர் அனிஷா பயாஸ், ஒன்றிய கவுன்சிலர் ஜெஸ்ஸி, வார்டு உறுப்பினர்கள் அன்னலிங்கம், சின்ன பாண்டி, ஏஞ்சலின் ஜெபா, சந்தானம், ராஜதுரை,மரிய பிரான்சிஸ், அலிஸ் பாப்பா, நியமன உறுப்பினர் பிரிட்டோ சிறப்பு அழைப்பா ளர்களாக தொழிலதிபர் தங்கையா கணேசன், சமூக சேவகர் லைசால் எட்வர்ட், காங்கிரஸ் ராஜன், திமுக மாவட்ட பிரதிநிதி வாழை த்தோட்டம் ராஜன், நவ்வலடி சரவ ணகுமார், ஆனைகுடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரவீந்திரன், துபாய் ஜுவல்லரி குமரகுரு,ஊராட்சி செயலர் இசக்கியப்பா மக்கள் நலப் பணியாளர் ரமேஷ் செல்வன் மோட்டிவேட்டர்கள் மகேஸ்வரி ,ஜென்சி திசை நகர இளைஞர் அணி நெல்சன், தொழிலதிபர் ஏ. அகமது முகைதீன்,ஏ.ஏம்.பயாஸ் தனபால், ஞானராஜ், ஹாட்சன், கிரீன் ஹவுஸ் ஜுலியஸ்ராஜா, குளோபல் பிரபாகர் பாண்டியன் பில்டர்ஸ் சூசை, புளியடி குமார், ஏழில், முத்து, சுவிஸ் சாலமோன், டென்னிஸ் தமிழ் ராஜா, முருகேசன் முத்துராமன் பால்சன் தானியல், பால்ராஜ் கிறிஸ்டோபர் ஜெயசிங், ஜஸ்டின் ஜான்ரோஸ், வின்சென்ட், பட்ச்சித்துரை, மணிகன்டன், தூய்மை காவலர்கள் மக்கள் நல பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் தொழிலாளர் கலந்து கொண்டு தலைவர்க்கு வாழ்த்து க்களையும், நன்றியினையும் தெரிவித்தனர்.

விழாவில் வார்டு உறுப்பினர் அனைவருக்கும் தலைவர் நினைவு சீல்டு மற்றும் சால்வை அணிவித்து கௌரவித்தார்கள், கலந்து கொண்ட அனைவருக்கும் இறுதியில் தலைவர் சார்பாக மதிய உணவு அளிக்கப்பட்டது.

## சென்னை விமான நிலையத்தில்
# வாகன பார்க்கிங் கட்டணம் உயர்வு

**சென்னை, அக்.12:** சென்னை விமான நிலையத்துக்குள் வரும் அனைத்து வாகனங்களுக்கும், பார்க்கிங் கட்டணத்தை உயர்த்தி, இந்திய விமான நிலைய ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி, கார்களுக்கு 30 நிமிடங்கள் வரை ரூ.85-ல் இருந்து ரூ.90 ஆகவும், ஒரு மணி நேரம் வரை ரூ.110-ல் இருந்து ரூ.115 ஆகவும், 2 மணி நேரம் வரை ரூ.165-ல் இருந்து ரூ.175 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், ஒவ்வொரு மணி நேரத் துக்கும் கட்டணம் உயர்ந்துள்ளது. கார்கள் 10 மணி நேரத்தில் இருந்து 24 மணி நேரம் வரை பார்க்கிங்கில் நிறுத்தப்பட்டிருந்தால், ரூ.550-ல் இருந்து ரூ.580 ஆக உயர்த்தப்பட் டுள்ளது.

இரு சக்கர வாகனங்களுக்கு, ஒரு மணி நேரத்துக்கு ரூ.20-ம், 2 மணி நேரத்துக்கு ரூ.35-ம் கட்டணம் என்ற பழைய கட்டணமே வசூலிக்கப்பட வுள்ளது. அதற்கு மேல் நிறுத்தப் படும் ஒவ்வொரு மணி நேரத்துக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை கூடுதல் கட் டணம் வசூலிக்கப்பட இருக்கிறது. இருசக்கர வாகனங்கள் 10 மணி நேரத்தில் இருந்து 24 மணி நேரம் வரை நிறுத்தப்பட்டால் ரூ.100-ல் இருந்து ரூ.105 ஆக உயர்த்தப்பட்டுள் ளது. விமான நிலையத்தில் பணி யாற்றும் ஊழியர்கள், தங்கள் கார்களுக்கு மாதம் ரூ.580, இருசக்கர வாகனங்களுக்கு மாதம் ரூ.230 கட் டணம் செலுத்த வேண்டும். இந்த புதிய கட்டண உயர்வு அதிகாலை முதல் அமலுக்கு வந்தது.

# ஊதிய உயர்வுக்கு ஏற்ப டாஸ்மாக் ஊழியர்களின் சம்பளக் கணக்கு மாற்றம்

**சென்னை, அக்.12:** தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் கடைகளில் 22,877 பணியாளர்கள் உள்ளனர். இவர் களுக்கு ஊதிய உயர்வு அறிவிக்கப் பட்டு கடந்த செப்.1-ம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, மேற்பார்வையாள ருக்கு ரூ.28,750, விற்பனையாளருக்கு ரூ.26,340, உதவி விற்பனையாளருக்கு ரூ.24,928 வழங்கப்படும். டாஸ்மாக் பணியாளர்களின் சம்பள கணக்கு எஸ்பிஐ வங்கியில் உள்ள நிலையில் அவர்களின் ஊதியத்துக்கு ஏற்ப அவர்களின் கணக்குகளும் மேம்படுத் தப்படுகிறது. அதன்படி ரூ.25 ஆயிரத்துக்கும் மேல் நிகர ஊதியம் பெறும் மேற்பார்வையாளர், விற் பனையாளருக்கு கோல்ட் பேக்கேஜ் ஆக மேம்படுத்தப்படுகிறது.

இதில் அவர்களுக்கு ரூ.50 லட்சம் வரை விபத்து மரணக் காப்பீடு உள் ளிட்ட சலுகைகளும், உதவி விற் பனையாளருக்கு சில்வர் பேக்கேஜ் ஆக ரூ.30 லட்சம் வரை விபத்து மரணக் காப்பீடு உள்ளிட்ட சலுகை களும் கிடைக்கும்.

அதனை சரிபார்த்து அக்.15-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

## க்ரைம் கார்னர்

# ஆன்லைன் முதலீட்டில் அதிக லாபம் என ஓய்வுபெற்ற வங்கி ஊழியரிடம் ரூ.3.40 கோடி மோசடி

**சென்னை, அக்.12:**

ஆன்லைன் முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும் என்று கூறி, சென்னையைச் சேர்ந்த 69 வயது ஓய்வு பெற்ற வங்கி ஊழியரிடம் ரூ.3.40 கோடி மோசடி செய்த வழக்கில், ஆந்திராவைச் சேர்ந்த ஒருவரை சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்துள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த 69 வயது ஓய்வுபெற்ற வங்கி ஊழியரை, கடந்த 2025-ம் ஆண்டு வாட்ஸ்-அப் மூலம் தொடர்பு கொண்ட மர்மநபர், தான் ராஜீவ் மேத்தா என்ற தலைமை முதலீட்டு அதிகாரி என அறிமுகப் படுத்திக் கொண்டார். மேலும், பெங்களூருவில் செயல் படும் தங்களது முதலீட்டு நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்று கூறி அவரை நம்ப வைத்துள்ளார்.

இதற்கிடையே, 'FYERSHNIVIP' என்ற பெயரில் செயல்பட்ட வாட்ஸ்-அப் குழுவில் சுமார் 50 பேர் உறுப் பினர்களாக இருப்பது போன்றும், அவர்கள் முதலீடு செய்து அதிக லாபம் ஈட்டியிருப்பது போன்றும் போலி யான உரையாடல்கள் பகிரப்பட்டன. இதை உண்மை என நம்பிய ஓய்வுபெற்ற வங்கி ஊழியர், நிறுவனம் வழங்கிய பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நபர்களின் வங்கிக் கணக்குகளுக்கு 13 தவணைகளாக மொத் தம் ரூ.3.40 கோடியை அனுப்பியுள்ளார். பின்னர் இது மோசடி என்பதை உணர்ந்த அவர், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

இதன் அடிப்படையில், மத்திய குற்றப்பிரிவு போலீ ஸார், சைபர் குற்றப்பிரிவு காவல் அதிகாரி தலைமை யில் தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை தீவிரப் படுத்தப்பட்டது. இதில், ஆந்திராவில் இருந்து இந்த மோசடி அரங்கேற்றப்பட்டது தெரியவந்தது. இதையடுத் து, விசாகப்பட்டினம் சென்ற போலீஸார், அனகாப் பள்ளி மண்டலத்தைச் சேர்ந்த கொனத்தலா கிருஷ்ணா (52) என்பவரை கைது செய்து சுமார் ரூ.21 லட்சத்தை மீட்டனர். மேலும் இதில் தொடர்புடையவர்களை போலீ ஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

# மீஞ்சூர் அருகே ரவுடியை வெட்டிவிட்டு தப்பிய 4 பேர் கைது

**பொன்னேரி, அக்.12:**

சென்னை, கொருக்குப்பேட்டையைச் சேர்ந்தவர் நிரேஷ்குமார் (35). பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர் புடைய ரவுடியான இவர் கடந்த 3-ம் தேதி, மீஞ்சூர் அடுத்த அத்திப்பட்டு பகுதியில் பெண் ஒருவருடன் இருந்தார். அப்போது மர்ம கும்பல், நிரேஷ்குமாரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பியோடியது. இதில், காயமடைந்த நிரேஷ்குமார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இதுகுறித்து மீஞ்சூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து நடத்திய விசாரணையில், அத்திப்பட்டு பகு தியைச் சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளியான சங்கர், தன் நண்பர்களுடன் சேர்ந்து நிரேஷ்குமாரை வெட்டியது தெரியவந்தது. இதையடுத்து, சங்கர் மற் றும் அவரது நண்பர்களை தீவிரமாக தேடி வந்த மீஞ் சூர் போலீஸார், சங்கரின் நண்பரான விக்னேஷ் (28) என்பவரை கைது செய்து சிறையிலடைத்தனர்.

மற்றவர்களை போலீஸார் தேடி வந்த நிலையில், மீஞ்சூர் அடுத்த புங்கம்பேடு பகுதியில் நேற்று முன் தினம் போலீஸார் ரோந்து பணியில் ஈடுபட்டபோது, அங்கு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த, அத்திப் பட்டு பகுதியைச் சேர்ந்த சரித்திர பதிவேடு குற்ற வாளி சங்கர் (28), கிஷோர் (28), ராகுல் டேவிட் (27), பவானி (27) என்ற பெண் என, 4 பேரை போலீஸார் கைது செய்தனர். இதில் போலீஸார் துரத்தியபோது தப் பியோட முயன்று அத்திப்பட்டு மேம்பாலத்தில் இருந்து கீழே விழுந்த சங்கர், ராகுல் டேவிட் ஆகியோருக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு மாவு கட்டுபோடப்பட் டது. கைதானவர்களிடம் இருந்து 4.6 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# தமிழகத்தில் பாஜகவால் கொண்டு வரப்பட்டவர்தான் விஜய்: பரந்தாமன் குற்றச்சாட்டு

**சென்னை, அக்.12:** மதுராந்தகம். தாராபுரம் தொகுதி திமுக வேட்பாளர்களான பரந்தாமன் மற்றும் சுகன்யா ஆகியோர் சென்னையில் திமுக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் தலை வர் மு.க.ஸ்டாலினை சந்தித்தனர்.

பிறகு செய்தியாளர்களிடம் பரந்தாமன் கூறிய தாவது: வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமதை யில் தலைமைச்செயலக அறைக்குள் அமைச்சர் கள் செய்கின்ற செயல்கள் அநாகரீகத்தின் உச்ச மாகும். வாக்குக்கு ரூ.5 ஆயிரம் கொடுக்கப்பட் டதாக கிராமங்களைக் குறிப்பிட்டு மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் கனகராஜ் பகிரங்கமாகச் சவால் விட்டதை வைகோ பார்க்க வேண்டும். இந்தத் தேர்தலே குதிரைப்பேரத்தால் மக்கள் மீது திணிக் கப்பட்ட தேர்தல் என்று அனைத்துக் கட்சிகளுமே கூறி வருகின்றன. இன்னும் 15 எம்எல்ஏக்களை ராஜினாமா செய்யப் போவதாக ஆதவ் அர் ஜுனா கூறுவது அவர்களின் நோக்கத்தைக் காட்டுகிறது. தமிழகத்தில் திராவிட இயக்கத்தின் சித்தாந்தத்தைச் சிதைப்பதற்காகவே பாஜகவால் கொண்டுவரப்பட்டவர் தான் விஜய். அவர் தனிப் பெரும் அரசியல் ஆளுமையால் வரவில்லை, இதற்குப் பின்னால் பாஜகவின் மூளையே செயல் படுகிறது. இவ்வாறு பரந்தாமன் தெரிவித்தார்.

## அமைச்சரவையில் இருந்து
# விசிகவை வெளியேற்ற முயற்சி: திருமாவளவன் குற்றச்சாட்டு

**சென்னை, அக்.12:** 'இடைத்தேர்தல் வெற்றிக்கு பாமக தான் காரணம் என கூறுவது அமைச்சரவையில் இருந்து விசிகவை வெளியேற்ற கட்டமைக்கப்படும் கதை' என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து முகநூல் பக்கத்தில் அவர் வெளியிட்ட வீடியோவில் கூறியிருப்பதாவது: இரண்டுதொகுதிஇடைத்தேர்தல் வெற்றிக்கும் விசிகவின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது மனசாட்சியுள்ள அனைவரும் அறிவர். ஆனால் இதுகுறித்து விவாதிப்பவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு விசிகவின் முக்கியத்துவத்தை மறைக்க முயற்சிக்கின்றனர்.

முதலிடத்தில் இருந்த அதிமுக 3-வது இடத்துக்கு சென்றுள்ளது. அதைக் குறித்துகூட பேசாதவர்கள், தவெக வெற்றிக்கு விசிக காரணம் இல்லை; பாமக தான் காரணம் என்ற கதையை கட்டமைக்கின்றனர். அவர்களின் நோக்கம் எப்படியாவது விசிகவை தவெக கூட்டணியில் இருந்தும், அமைச்சரவையில் இருந்தும் வெளியேற்ற வேண்டும் என்பது தான். திமுக கூட்டணியில் இருந்த போதும் இதே முயற்சிகளை செய்தனர். அதையே தற்போதும் கையாளுகின்றனர். அதிமுகவின் வாக்குகள் எப்படி திமுகவுக்கு வராதோ அதேபோல விசிக அங்கம் வகிக்கும் கூட்டணிக்கு பாமகவின் வாக்குகள் கிடைக்காது.

தவெகவுக்கு பாமக ஆதரவு அளிக்க போகிறது; தவெக கூட்டணியில் இணைந்து அமைச்சரவையில் இடம்பெற போகிறது என பரப்பினர். இப்படி ஒரு ஆசையை தூண்டுவதன் மூலம் பாமகவின் வாக்குகள் திமுகவுக்குச் செல்லாமல் கணிசமான வாக்குகள் தவெகவுக்கு செல்ல வேண்டும் என்ற உள்நோக்கத்துடனும், விசிகவினரை சோர்வடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் பரப்பியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## நீட் தேர்வை ரத்து செய்வதே நாட்டுக்கு பலன் தரும்
# பயப்படாமல் போராட வருமாறு மாணவர்களுக்கு ராகுல் அழைப்பு

**சென்னை, அக்.12:** "பயம், வெறுப்பு மற்றும் பிரிவினையைப் பயன்படுத்தி நாட்டை ஆள பிரதமர் மோடி நினைக்கிறார். கடந்த 15 ஆண்டுகளாக அவர் நடத்தி வந்த நாடகம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது" என மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

இந்திய கல்வி முறையில் நடைபெறும் முறைகேடுகள், நீட் உள்ளிட்ட தேர்வுத்தாள் கசிவுகள், கல்விக் கட்டண உயர்வு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களை திரட்டி நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி 'மாணவர்களின் குரல்' என்ற நிகழ்ச்சி வாயிலாக அவர்களுடன் பேசி வருகிறார். அதன்படி சென்னையில் உள்ள தீவுத்திடலில் நேற்று மாணவர்கள் முன்னிலையில் ராகுல் காந்தி பேசினார்.




அப்போது அவர் கூறியதாவது: நான் எப்போது இந்த மண்ணுக்கு வந்தாலும், உங்களிடமிருந்தும் தமிழகத்தின் ஞானத்திலிருந்தும் ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொண்டு தான் செல்கிறேன். தமிழ்நாட்டின் மீதும் தமிழ் கலாச்சாரம் மீதும் முழு அளவிலான தாக்குதல் நடத்தப்படுகிறது. புதிய கல்விக் கொள்கை மூலம் தமிழகத்துக்கு வர வேண்டிய ரூ.3,300 கோடியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. நீட் தேர்வு காரணமாக எம்பிபிஎஸ் இடங்களில் தமிழ் வழி மாணவர்களின் பங்கு 87 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆளுநர் மூலம் ஆர்எஸ்எஸ் ஆட்களைப் பல்கலைக் கழகங்களில் திணிப்பதால், 70 சதவீத மாநிலப் பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர்கள் இல்லாமல் இயங்குகின்றன. மத்திய அமைச்சர் அமித் ஷா தமிழ்மொழி இரண்டாம் பட்சம் என்று வெளிப்படையாகக் கூறுகிறார். தொகுதி மறுவரையறை மூலம் தமிழகத்தின் குரலை ஒடுக்க நினைக்கிறார்கள். இதையெல்லாம் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

மொழி திணிப்பில் தமிழகத்துக்கு கல்விக்கான ரூ.3,300 கோடி நிதி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். 70 சதவிகித பல்கலைகழகங்களில் துணைவேந்தர்கள் இல்லை. இதை நிறுத்தி வைத்துள்ள தமிழ்நாடு ஆளுநர், உங்கள் கல்வி நிலையங்களில் ஆர்எஸ்எஸ் அமைப்பினரை அமர்த்தி அவர்கள் நிர்வாகிக்க வேண்டும் என விரும்புகிறார். தொகுதி மறுவரையறையில் தமிழ்நாட்டின் எம்பிக்கள் எண்ணிக்கையை நாடாளுமன்றத்தில் குறைக்கவும் விரும்புகின்றனர். ஆனால், இவர்களால் தமிழ்நாட்டை தொடக்கூட முடியாது. பயம், வெறுப்பு மற்றும் பிரிவினையைப் பயன்படுத்தி நாட்டை ஆள பிரதமர் மோடி நினைக்கிறார். கடந்த 15 ஆண்டுகளாக அவர் நடத்தி வந்த நாடகம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது. எதிர்க்கட்சிகள் அவரைச் சூழ்ந்து கொண்டுள்ளன. தேசத்துக்கு எதிராக அவர் செய்த குற்றங்களுக்கு அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது உறுதி.

மோடி எவ்வளவு பெரிய சக்தி வாய்ந்தவராக இருந்தாலும், மாணவர்களின் குரலையும் இந்த நாட்டின் ஆன்மாவையும் யாராலும் ஒடுக்க முடியாது. மாணவர்களே, நீங்கள் பயப்படத் தேவையில்லை; நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். உங்கள் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், எதையும் கேள்விகளுக்கேற்ப ஆராய்ந்து தெரிந்து கொள்ளுங்கள். ஒன்றாக இணைந்து நாம் மோடியைத் தகர்ப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

# சென்னை மாநகராட்சியில் 43 இடங்களில் 23.9 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் அகற்றம்!

**சென்னை, அக்.12:** சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று 43 இடங்களிலிருந்து 23.9 மெட்ரிக் டன் பழைய சோபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

இது தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைக ளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பெற்று அகற்றும் பணி இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், நேற்று மட்டும் 43 நபர்களிடமிருந்து வரப்பெற்றதகவலின் அடிப்படையில், 23.9 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

இதற்காக 20 எண்ணிக்கையிலான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே



பெருநகர சென்னை மாநகராட்சியின் "நம்ம சென்னை" செயலியில் பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதனடிப்படையில் மாநகராட்சி பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகரத்தின்
தினத்தென்றல்



## ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகைக்கு

# கூடுதல் சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டம்

### கிளாம்பாக்கத்தில் அதிகாரிகள் ஆலோசனை



**சென்னை, அக்.12:** ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகைக்காக கிளாம்பாக்கத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவது குறித்து அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

இந்தாண்டுக்கான ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகை விடுமுறையை முன்னிட்டு பொதுமக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி, பாதுகாப்பாகப் பயணம் செய்வதை உறுதிசெய்யும் வகையில் போக்குவரத்து கழகங்கள் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இதுகுறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் கிளாம்பாக்கத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் நேற்று நடைபெற்றது.

சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் ராகுல்நாத் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் வீரப்பன் ஆகியோர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இதில் பண்டிகை காலத்தையொட்டி கூடுதலாக இயக்கப்பட உள்ள சிறப்புப் பேருந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகளின் இயக்கம் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

பேருந்து நிலையங்களுக்கு வரும் பயணிகளுக்குத் தேவையான குடிநீர், கழிவறை மற்றும் நிழற்குடை உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் தடையின்றி வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை: மேலும், பண்டிகை நாட்களில் கிளாம்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தின் வாயிலாக விவாதிக்கப்பட்டது.

விடுமுறை நாட்களில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைப்பது மற்றும் கூடுதலாக இயக்கப்படும் பேருந்துகளை நிறுத்துவதற்கான பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் தாம்பரம் காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) பிரபாகர், கிளாம்பாக்கம் பேருந்து முனைய முதன்மை நிர்வாக அதிகாரி மாலதி, தமிழ்நாடு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் குணசேகரன், மாநகர போக்குவரத்துக்கழக இணை மேலாண்மை இயக்குநர் சுந்தர பாண்டியன் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ஆதாரங்கள் அடிப்படையில் வரலாற்று ஆய்வு

### தக்ஷிண பத மாநாட்டில் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் வலியுறுத்தல்



**சென்னை, அக்.12:** நமது வரலாறு ஆதாரங்களின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டுமே தவிர, குறிப்பிட்ட சித்தாந்தங்களின் அடிப்படையிலோ, பிளவுபடுத்தும்வாதங்களாகவோ சுருக்கப்படக்கூடாது என்று ஆளுநர் அர்லேகர் தெரிவித்தார்.

திங் இந்தியா அமைப்பு சார்பில் நடத்தப்படும் ‘தக்ஷிண பத 2.0’ மாநாடு சென்னை ஐஐடியில் நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டை ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

“ஆழமான கல்வியறிவு, முதன்மை வரலாற்றுச் சான்றுகள், அறிவுப்பூர்வமான விவாதங்கள் ஆகியவற்றின் மூலம் நமது வரலாற்றுப் புரிதலை மீட்டெடுக்க வேண்டியது அவசியம். நமது வரலாறு தெளிவான ஆதாரங்களின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டும்.

காலங்காலமாக நிலவும் அனுமானங்களைக் கேள்விக்குள்ளாக்குவதும், பல்வேறு தரப்பினரின் வரலாற்று விளக்கங்களை விமர்சன ரீதியில் அணுகுவதும், இந்தியாவின் கடந்த காலம் குறித்த விவாதங்களில் அறிவு சார் நேர்மையைக் கடைப்பிடிப்பதும் இளம் அறிஞர்களின் முக்கியப் பொறுப்பாகும். இந்தியாவின் அறிவுசார் விவாதங்களில் மாணவர்களும், தலைசிறந்த கல்வி நிறுவனங்களும் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும்.

தென்னிந்தியா முழுவதும் ‘தக்ஷிண பத’ தொடர்ச்சியான கல்வி மற்றும் அறிவுசார் இயக்கமாக உருவெடுக்க வேண்டும். இதன்மூலம் பிராந்திய பாரம்பரியத்தில் ஆழமாக வேரூன்றியவர்களாகவும், தங்களது அறிவுசார் மரபுகளில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், அதேநேரம் தேசத்தின் மீதான பொறுப்பை முழுமையாக உணர்ந்தவர்களாகவும் விளங்கும் புதிய தலைமுறை உருவாகும் என நம்புகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## குண்டும் குழியுமான சாலையால் போக்குவரத்து பாதிப்பு



திருநெல்வேலி மாநகராட்சிக்கு உட்பட்ட ஆசாத் சாலை (பழைய குற்றால சாலை ) இந்த பிரதான சாலை ஒரு வழிப்பாதை சாலை கடந்த ஒரு மாதங்களுக்கு முன்னர் பாதாள சாக்கடை பணியின் போது இணைப்பு கொடுத்துவிட்டு சாலையை சீரமைக்க வில்லை முறையான தார்சாலை அந்தப் பகுதியில் அமைக்கவில்லை இதானால் மழை பெய்து மழை நீர் தேங்கியதால் சாலை குண்டும் குழியாக மாறிவிட்டது தற்போது மழை நீர் வடிந்து சாலை பள்ளம் ஏற்பட்டு வாகன போக்குவரத்துக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது ஆகையால் மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறை உடனடியாக சாலையை சீர் செய்து தரவேண்டிய பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை மேலும் அந்த சாலையில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் மற்றும் அவசர ஊர்தி செல்லும் சாலையாக உள்ளது

## வங்கிக் கணக்குகள் கண்காணிப்பு அவசியம்:

# இணையவழி நிதி மோசடிகளை தடுக்க தமிழக டிஜிபி அறிவுரை

**சென்னை, அக்.12:** இணையவழி நிதி மோசடிகளை தடுக்க மியூல் வங்கிக் கணக்குகளை கண்காணிக்க வேண்டும் என்று வங்கி அதிகாரிகளுக்கு டிஜிபி அறிவுறுத்தினார்.

இணையவழி நிதி மோசடிகளை தடுப்பது, மோசடி செய்யப்பட்ட பணத்தை மீட்பது தொடர்பாக, வங்கி அதிகாரிகளுடன் தமிழக காவல்துறை சார்பில் மாநில அளவிலான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இணையவழிக் குற்றப் பிரிவு கூடுதல் டிஜிபி அபின் தினேஷ் மொடக் உள்ளிட்ட அதிகாரிகளும், வங்கிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். கூட்டத்தில், மோசடிக்குப் பயன்படுத்தப்படும் மியூல் வங்கிக் கணக்குகளை (மோசடி நபர்கள் மற்றவர்களின் பெயரில் பயன்படுத்தும் வங்கிக் கணக்குகள்) கண்டறிந்து கண்காணிக்கவும், சந்தேகத்துக்குரிய பரிவர்த்தனைகளை ஏபிஐ தொழில்நுட்பம் மூலம் முடக்கவும் டிஜிபி அறிவுறுத்தினார்.

ஏற்கெனவே உள்ள வங்கிக் கணக்குகள் மோசடிக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, உரிய தணிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இணையவழிக் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வை வங்கிக் கிளைகள், ஏடிஎம் மையங்கள், இணையதளங்கள் மற்றும் செயலிகள் மூலம் ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

## இளைஞர்களைக் கண்டு பாஜக அரசு பயப்படுகிறது: கார்த்தி சிதம்பரம் கருத்து

**சென்னை, அக்.12:** “இளைஞர்களைக் கண்டு மத்திய பாஜக அரசு பயப்படுகிறது” என சிவகங்கை காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இளைஞர்களைக் கண்டு மத்திய பாஜக அரசு பயப்படுகிறது. இந்தியாவின் இளைஞர்களின் கூர்மையான கேள்விகளுக்கு அவர்களால் பதிலளிக்க முடியவில்லை. தற்போதைய சூழ்நிலை, வாய்ப்புகள் இல்லாதது, குறிப்பாகத் தேர்வு முறையில் இப்போதும் நிலவும் அநீதி மற்றும் இந்த அரசின் தன்னிச்சையான போக்கு ஆகியவற்றால் இளைஞர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் நிலைமையை மதிப்பிட்டு அதற்கேற்ப தகுந்த நடவடிக்கைகளை எடுப்போம். இந்த விவகாரத்தில் இண்டியா கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் மீண்டும் கூடி உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

தேர்தல் ஆணையத்தின் எஸ்ஐஆர் நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதன் வடிவமைப்பு, குறிப்பாக 6 மற்றும் 7 படிவங்கள் குறித்த விவகாரங்களை வெளிச்சம் போட்டுக் காட்ட இண்டியா கூட்டணி அனைத்து அமைப்புகளையும் சந்திக்க திட்டமிட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சாலை விரிவாக்கத்திற்காக 7 மரங்கள் அகற்றம்

# 210 கி.மீ. பயணித்து மீண்டும் உயிர்பெற்றன!



**கடலூர், அக்.12:** சாலை விரிவாக்க பணிக்காக அகற்றப்பட்ட 7 மரங்கள் ராணிப்பேட்டையில் இருந்து சிதம்பரத்துக்கு 210 கி.மீ. தூரம் பயணிக்க வைத்து மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டது.

சாலை விரிவாக்க பணிக்காக வேரோடு பிடுங்கப்பட்ட அரச மரம் வீரசோழகன் கிராமத்தில் நடப்பட்டது.

தமிழகத்தில் சாலை விரிவாக்கத்திற்காக 100 ஆண்டுகள் பழமையான மரங்கள் கூட ஒரே நாளில் வெட்டி சாய்க்கப்படுகிறது. விதிகளின்படி வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் ஈடாக 10 புதிய மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும். ஆனால் நெடுஞ்சாலைத்துறையினர் மரங்களை வெட்டுவதில் காட்டும் ஆர்வத்தை புதிய கன்றுகளை நடுவதில் காட்டுவதில்லை என்று சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறு சாலை விரிவாக்க பணிக்காக பல ஆண்டுகள் பழமையான மரங்களை முற்றிலும் வெட்டி அழிப்பதற்கு பதிலாக நவீன எந்திரங்களை பயன்படுத்தி அவற்றை வேரோடு பிடுங்கி வேறு இடங்களில் மறுநடவு செய்ய வேண்டும் என்று இயற்கை ஆர்வலர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு மாற்றாக மரங்களை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு சென்று நடும் வகையில் தமிழக அரசு திட்டம் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த நிலையில் ராணிப்பேட்டை சிப்காட்டில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு மரங்கள் வெட்டப்பட்டன. இதுபற்றி அறிந்த கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகே உள்ள வீரசோழகன் கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் தரணி திருவேங்கடம் என்பவர் நேரில் சென்று ஒரு ஆலமரம், 4 அரச மரங்கள், 2 ஈச்ச மரங்களை வெட்ட வேண்டாம், நவீன எந்திரம் மூலம் அதை பிடுங்கி தனது சொந்த ஊருக்கு சென்று மீண்டும் நட்டு பராமரிக்கிறேன் என்று நெடுஞ்சாலைத்துறையினரிடம் அனுமதி பெற்றார்.

இதையடுத்து அந்த மரங்கள் பாதுகாப்பாக வேரோடு பிடுங்கி 2 லாரிகள் மூலம் 210 கிலோ மீட்டர் தூரமுள்ள வீரசோழகன் கிராமத்திற்கு கொண்டு வரப்பட்டு அவரது விவசாய நிலத்தில் நடப்பட்டன. சாலை விரிவாக்க பணிக்காக அகற்றப்பட்ட 7 மரங்களை 210 கிலோ மீட்டர் பயணிக்க வைத்து மீண்டும் உயிர் கொடுத்த சமூக ஆர்வலரை பலரும் பாராட்டி வருகிறார்கள்.

# பள்ளி மாணவர்களுக்கு கேக் வழங்க ஏற்பாடு!

**சென்னை, அக்.12:** குழந்தைகள் நாளையொட்டி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கேக் வழங்க தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கேக் துண்டுகள் வழங்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. ரூ.9.27 கோடியில் 61.84 லட்சம் கேக் துண்டுகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

ஒரு கேக் துண்டு 45 கிராம் இருக்கும் அளவிற்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாட்டில் குழந்தைகள் நாள் விழா ஆண்டுதோறும் நவம்பர் 14 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளான நவம்பர் 14 அன்று கொண்டாடப்படுகிறது.

ஜவஹர்லால் நேரு, குழந்தைகள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அதனால், அவரது மறைவுக்குப் பிறகு அவரது பிறந்த நாள் குழந்தைகள் நாளாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், குழந்தைகள் நாளையொட்டி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கேக் வழங்கப்படவுள்ளது.

## வணிகச் செய்திகள்

### மூன்று சக்கர வாகனங்கள் விற்பனை 40% அதிகரிப்பு

**சென்னை, அக்.12:** கடந்த செப்டம்பரில் மூன்று சக்கர வாகன விற்பனை, 40 சதவீதம் அதிகரித்துள்ளது. 2025 செப்டம்பரில், 61 ஆயிரத்து 434 மூன்று சக்கர வாகனங்கள் விற்பனையான நிலையில், நடப்பாண்டு செப்டம்பரில் 86 ஆயிரத்து 24 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதில், மின்சார வாகனங்களின் பங்கு, 65 சதவீதமாக உயர்ந்துள்ளது.

குறைந்த பயன்பாடு மற்றும் பராமரிப்பு செலவு, அதிக செயல்திறன் மற்றும் ரேஞ்ச், சார்ஜிங் கட்டமைப்பு அதிகரிப்பு, மின்சார வாகனங்களுக்கு சி.என்.ஜி., வாடிக்கையாளர்கள் மாறி வருவது உள்ளிட்டவை மூன்று சக்கர மின்சார வாகனங்களின் விற்பனைக்கு முக்கிய காரணங்கள். இந்த மாதத்தின் மொத்த மின்சார வாகன விற்பனையில் மூன்றில் இரண்டு பங்கு, மூன்று சக்கர வாகனங்கள் ஆகும். பஜாஜ் நிறுவனம், கடந்த மாதம் 15 ஆயிரத்து 109 மூன்று சக்கர வாகனங்களை விற்பனை செய்து, முதல் இடத்தில் உள்ளது. இதை, மஹிந்திரா, டி.வி.எஸ்., ஒய்.சி., எலக்ட்ரிக் உள்ளிட்ட நிறுவனங்கள் பின் தொடர்கின்றன.

### பாலியெஸ்டர் நூல் விலை 50% உயர்வு: செயற்கை நூலிழை ஆடை உற்பத்தி மந்தம்

**திருப்பூர், அக்.12:** பாலியெஸ்டர் நூல் விலை கடந்த நான்கு மாதங்களில் 50 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளதால், திருப்பூரில் செயற்கை நூலிழையில் தயாரிக்கப்படும் விளையாட்டு ஆடை மற்றும் உடற்பயிற்சி ஆடை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய போர் பதற்றம் மற்றும் கச்சா எண்ணெய் வினியோக சிக்கல்களால், பெட்ரோலிய மூலப்பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 60 டாலரில் இருந்து 102 டாலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் தாக்கம் பாலியெஸ்டர் நூல் உற்பத்தியிலும் எதிரொலித்துள்ளது.

கடந்த நான்கு மாதங்கள் முன் கிலோ 150 ரூபாயாக இருந்த பாலியஸ்டர் நூல் விலை, தற்போது 230 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதனால், உற்பத்தி செலவு அதிகரித்து, செயற்கை நூலிழை ஆடை உற்பத்தியாளர்கள் சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக, பாலியெஸ்டர் துணியை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, உயர்தர ஆடைகளை தயாரிப்பதில் திருப்பூர் நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்தி வந்தன. ஆண்டு முழுதும் நூல் விலை சீராகவும், மூலப்பொருள் தடையின்றியும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இந்த வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்தது. இந்நிலையில், கடந்த ஆறு மாதங்களாகத் தொடர்ந்து அதிகரித்து வரும் நூல் விலை, இத்துறையின் வளர்ச்சிக்குப் புதிய சவாலாக மாறியுள்ளது..


Outside Hot & Inside Cold
MAGIZH
FRIED ICE CREAM
GSK TRADERS
Since 2021
MAGIZH
Fried Ice Cream
A Crunchy Treat
with a Cool Surprise!
Crispy Outside
Creamy Inside
M1
VENNILA
M2
BUTTER SCOTCH
M3
CHOCOLATE
M4
STRAWBEERY
Real Ice Cream • Real Happiness
For Orders & Enquiries
9043423523
NO 9, 4TH BLOCK,
VEERAMAMUNIVAR STREEET,
MUGAPPAIR EAST, 600 037.

## குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு

# சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்!



**தென்காசி, அக்.12:** தென்காசி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து இதமான காலநிலை நிலவி வருகிறது. இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து சற்று அதிகரித்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தென்காசி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத்தலமாக குற்றாலம் விளங்கி வருகிறது.

இங்கு உள்ள பிரதான அருவிகள் மற்றும் சிற்றருவிகளில் குளித்து மகிழ்வதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில், தென்காசி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் குற்றாலம் பகுதியில் வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளிர்ச்சியான சூழல் நிலவுகிறது. மேலும், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் மழையின் காரணமாக குற்றால அருவிகளுக்கு வரும் தண்ணீரின் அளவும் சற்று அதிகரித்துள்ளது.

குறிப்பாக புலி அருவி, சிற்றருவி மற்றும் ஐந்தருவி ஆகியவற்றில் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழும் வகையில் மிதமான அளவில் தண்ணீர் விழுந்து வருகிறது.

ஐந்தருவியில் உள்ள 5 கிளைகளிலும் தண்ணீர் மிதமாக விழுந்து வருகிறது. இதனால் அங்கு வரும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளித்து மகிழ்கின்றனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் காலை முதலே ஐந்தருவியில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்தது. குடும்பத்துடன் வந்தவர்கள் மற்றும் நண்பர்களுடன் வந்தவர்கள் அருவியில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

அதே நேரத்தில், குற்றாலம் மெயின் அருவி மற்றும் பழைய குற்றால அருவியில் குறைந்த அளவே தண்ணீர் விழுந்து வருகிறது. இதனால் அந்த அருவிகளில் குளிக்க வந்த சுற்றுலா பயணிகள் சற்று ஏமாற்றம் அடைந்தனர்.

இருப்பினும், குற்றாலம் பகுதியில் நிலவும் இதமான காலநிலையும், சில அருவிகளில் குளிப்பதற்கு ஏற்ற வகையில் தண்ணீர் விழுவதும் சுற்றுலா பயணிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விடுமுறை தினமான நேற்று குற்றாலம் அருவிகளில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது.

## பூந்தமல்லி – வடபழனி மெட்ரோ ரயில் திட்டம்

# அதிமுக ஆட்சியில் போடப்பட்ட விதை: இபிஎஸ் பெருமிதம்



**சென்னை, அக்.12:** "அதிமுக ஆட்சியில் நாம் விதைத்த விதைகளான பூந்தமல்லி - வடபழனி வழித்தட மெட்ரோ ரயில் திட்டம் தற்போது வரை விருட்சமாவதைக் காண மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இன்றைய தினம், தமிழகத்திற்கு வருகை புரிந்து, சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்ட திட்டத்தின் வடபழனி-பூந்தமல்லி வழித்தடத்தை துவக்கி வைத்துள்ள பிரதமர் மோடியை சென்னை விமான நிலையத்தில் மகிழ்ச்சியோடு வரவேற்றேன். இந்த திட்டத்தை பொறுத்தவரை, எனது தலைமையிலான அதிமுக அரசு இருந்தபோது, இதற்கான டிபிஆர் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதி பெற்று, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மத்திய அரசின் நிதி வராத சூழலிலும், மாநில அரசின் நிதியை ஒதுக்கீடு செய்து, பணிகளை துவக்கிய அரசு அஇஅதிமுக அரசு. மேலும், பிரதமரை பலமுறை நான் நேரில் சந்தித்து இதற்கான நிதி குறித்து கோரிய நிலையில், மத்திய அரசும் நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ரூ.63,246 கோடி ஒதுக்க 2024-ம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. அதன் அடிப்படையில் இன்றைய தினம், பூந்தமல்லி - வடபழனி வழித்தடம் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. அதிமுக ஆட்சியில் நாம் விதைத்த விதைகள், தற்போது வரை விருட்சமாவதைக் காண மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த பழனிசாமி நினைத்திருந்தால் மெட்ரோ பாலத்தின் மீது கூலிங் கிளாஸ் போட்டு ஒரு போட்டோ ஷூட், சுரங்கத்தின் அடியில் பாதுகாப்பு ஹெல்மெட் போட்டு ஒரு ரீல்ஸ் ஷூட்டிங் எடுத்திருக்க முடியும். ஆனால், அப்படிப்பட்ட ஏமாற்று அரசியலில் எனக்கு ஒருநாளும் உடன்பாடு இல்லை.

"நாம் பேசக் கூடாது. நம்முடைய செயல்கள் பேச வேண்டும்" என்பதை எப்போதும் நம்புபவன் நான். யாருடைய ஆட்சி இருந்தாலும், நம்முடைய செயல்கள் தான் தமிழக மக்களை உயர்த்திக் கொண்டிருக்கிறது என்ற பெருமிதத்தை நமது திட்டங்கள் இன்றுவரை நமக்கு தந்துக்கொண்டு இருக்கின்றன. இந்த இனிய தருணத்தில், தலைநகர் சென்னையின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு மெச்சத்தக்க பங்காற்றிவரும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் அலுவலர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# சைதாப்பேட்டை சிறையில் கைதிகள் திடீர் மோதல்: 27 பேர் புழல் சிறைக்கு மாற்றம்




**சென்னை, அக்.12:** சைதாப்பேட்டை கிளை சிறையில் கைதிகள் இடையே ஏற்பட்ட மோதலில் 4 பேர் காயம் அடைந்தனர்.

சென்னை புழல் மத்திய சிறையில் இடப்பற்றாக்குறை காரணமாக, அங்கு அடைக்கப்பட்டிருந்த 23 கைதிகள் கடந்த வாரம் சைதாப்பேட்டை கிளை சிறைக்கு மாற்றப்பட்டனர். அங்கு போதிய இடவசதி இல்லை எனக் கூறிய அவர்கள், தங்களை மீண்டும் புழல் மத்திய சிறைக்கு மாற்ற வேண்டும் என்று சிறை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இதுதொடர்பாக சிறை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிகிறது.

இதனால் ஆத்திரமடைந்த புழல் சிறையிலிருந்து மாற்றப்பட்ட கைதிகள், நேற்று முன்தினம் காலை சைதாப்பேட்டை கிளை சிறையின் சமையல் அறையில் உணவு தயாரித்துக் கொண்டிருந்த 4 கைதிகளைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதனால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது ஒருவரையொருவர் சரமாரியாகத் தாக்கிக் கொண்டதில் 4 கைதிகள் காயமடைந்தனர். இதைக் கண்ட சிறைக் காவலர்கள் விரைந்து சென்று இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தினர். மேலும், காயமடைந்த 4 கைதிகளையும் மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இதையடுத்து, சிறைத்துறை டிஐஜி பழனி சைதாப்பேட்டை கிளை சிறைக்குச் சென்று, அங்குள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தினார். பின்னர், புழல் மத்திய சிறையிலிருந்து மாற்றப்பட்ட 23 கைதிகள் மற்றும் மோதலில் காயமடைந்த 4 கைதிகள் என மொத்தம் 27 பேரையும் மீண்டும் புழல் மத்திய சிறைக்கு மாற்ற உத்தரவிட்டார்.

இதன்படி, சிறை அதிகாரிகளின் உத்தரவின்பேரில், 27 கைதிகளையும் போலீஸார் பலத்த பாதுகாப்புடன் நேற்று முன்தினம் மாலை புழல் மத்திய சிறைக்கு அழைத்துச் சென்று அடைத்தனர். இதற்கிடையே, இந்த மோதல் சம்பவம் தொடர்பாக கைதிகள் ஜோசுவா, சஞ்சய் என்ற ஜாங்கோ, ஸ்ரீகுமார், விக்னேஷ், சூர்யா, அருண், சதீஷ், தினேஷ்குமார், வெள்ள சரத், வசந்தகுமார் உள்ளிட்டோரிடம் சிறைத்துறை நிர்வாகம் விசாரணை நடத்தி வருகிறது.

# நேபாளத்தில் மீண்டும் வெள்ளப்பெருக்கு!

## பொதுமக்களுக்கு அரசு எச்சரிக்கை

**காத்மண்டு, அக்.12:** நேபாளத்தில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. பொதுமக்களுக்கு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேபாளத்தில் புத்தி கண்டகி ஆற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, பொது மக்களுக்கு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபற்றி தேசிய பேரிடர் ஆபத்து குறைப்பு மற்றும் மேலாண் கழகம் வெளியிட்ட செய்தியில், புத்தி கண்டகி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்றும் அதனால், திரிசூலி தோபன் பகுதி வரை வெள்ளம் பாய கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனே வெளியேறும்படி எச்சரித்து உள்ளது. உயரம் குறைந்த பகுதிகளில் இருந்து வெளியேறி அதிக உயரம் உள்ள பகுதிகளுக்கு செல்லும்படி அறிவுறுத்தல் அளிக்கப்பட்டு உள்ளது.

கடந்த ஆகஸ்டில் நேபாளத்தில் ஆகஸ்டு மாதம் பெருவெள்ளம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில், இந்த எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. 6 ஆயிரம் பேரை காணவில்லை. பெருவெள்ள பாதிப்பு ஏற்பட்டு ஏறக்குறைய 40 நாட்கள் ஆன நிலையில், அந்நாட்டு அரசு புனரமைப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது.

நேபாள-திபெத் எல்லைக்கு அருகே கடந்த ஆகஸ்டு 26-ந்தேதி இமயமலை பிராந்தியத்தில் திடீரென்று பனிப்பாறை உடைந்து போடேகோஷி நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளப்பெருக்கால் மத்திய மற்றும் வடக்கு நேபாளத்தில் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன. பெருவெள்ளத்துடன் வந்த சேறும், சகதியும் உள்கட்டமைப்புகளை முற்றிலும் சீரழித்தன.

இந்த துயர சம்பவத்தில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள். இந்த எண்ணிக்கை 1,453 என்று அதிகாரப்பூர்வ தகவல் வெளியானது. எனினும், அவர்களில் 112 பேரின் உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

### மீண்டும் வெள்ளப்பெருக்கு

இதுவரை 13,795 பேர் மீட்கப்பட்டு உள்ளனர். அவர்களில் 1,113 பேர் 21 மையங்களில் தங்க வைக்கப்பட்டனர். தவிர திபெத்தில் வெள்ளப்பெருக்கில் சிக்கி 43 பேர் பலியாகி இருந்தனர். 500-க்கும் மேற்பட்டோரை காணவில்லை என சீன ஊடகம் தெரிவித்தது. இந்த சூழலில், புத்தி கண்டகி ஆற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. ஆற்றில் இருந்து கருப்பு நிறத்தில், சேறு கலந்த நீர் வெளியேறி வருகிறது.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை!

## கடந்த 24 மணி நேரத்தில் 9 பேர் பலி

**இம்பால் அக்.12:** மணிப்பூரில் 2023ம் ஆண்டு நாகா, குக்கி இனக்குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் பலர் கொல்லப்பட்ட நிலையில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டு நிலைமை கட்டுக்குள் வந்தது. பின்னர், ஜனாதிபதி ஆட்சி திரும்பப்பெறப்பட்டது.

அம்மாநிலத்தில் பாஜக ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் மாநில முதல்வராக யும்னம் கேம்சந்த் சிங் செயல்பட்டு வருகிறார். இதனிடையே, அம்மாநிலத்தில் வன்முறை தற்போது பெருமளவு கட்டுப்படுத்தப்பட்ட போதும் அவ்வப்போது மோதல் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்த நிலையில், மணிப்பூர் மாநிலத்தின் மலை மாவட்டங்களில் குகி - நாகா சமூகங்களுக்கு இடையே மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு, பதுங்கித் தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்களில் குறைந்தது 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 14 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. காம்ஜோங் மாவட்டத்தில் நாகா கிராமக் காவலர்கள் இருவர் கொல்லப்பட்டனர். காங்போக்பி மாவட்டத்தில் நடத்தப்பட்ட பதுங்கித் தாக்குதலில் நாகா தன்னார்வலர் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்தனர். உக்ருல் மாவட்டத்தில் காரில் சென்ற சந்தீப் ராய் என்பவரும் ஆயுதம் ஏந்திய நபர்களின் தாக்குதலில் கொல்லப்பட்டார். மேலும் சில உயிரிழப்புகள் தொடர்பாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன; அவை அனைத்தும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

வன்முறையைத் தொடர்ந்து காம்ஜோங் மாவட்டத்தின் சில பகுதிகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. காங்போக்பி மாவட்டத்தில் சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 24 மணி நேர முழு அடைப்புக்கு பழங்குடியின ஒற்றுமைக் குழு அழைப்பு விடுத்துள்ளது. தாக்குதல்களின் பின்னணி மற்றும் குற்றவாளிகள் குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். தற்போது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.






சிகரத்தின்

# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




## ஏஐ தொழில்நுட்பத்தை நம்பக்கூடாது!: சத்ய நாதெல்லா

**வாஷிங்டன், அக்.12:** மைக்ரோசாப்ட் சிஇஓ சத்யா நாதெல்லா கூறியதாவது: மேம்பட்ட ஏஐ மாடல்களைப் பயன்படுத்தும்போது, தவறு ஏற்பட்டால் அவற்றை உடனடியாக நிறுத்தும் வகையிலான கட்டுப்பாட்டு அமைப்புகள் அவசியம். ஏஐ தொழில்நுட்பத்தின் செயல்பாடுகளை மனிதர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அதன் பாதுகாப்பு குறித்து தயாரிப்பு நிறுவனங்கள் அளிக்கும் உறுதிமொழிகளை மட்டுமே நம்பக்கூடாது.

மேலும், ஏஐ தொழில்நுட்பம் மனிதர்களின் முடிவெடுக்கும் அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்ற அனுமதிக்கக் கூடாது. எவ்வளவு மேம்பட்ட ஏஐ மாடலாக இருந்தாலும், அதன் செயல்பாடுகள் மனிதர்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

ஏஐ தொழில்நுட்பத்தை கண்மூடித்தனமாக நம்பக்கூடாது. நிறுவனங்கள் ஏஐ தொழில்நுட்பத்தை அப்படியே நம்புவதை நிறுத்த வேண்டும். நிறுவனங்கள் மிகவும் ஆற்றல் வாய்ந்த மேம்பட்ட ஏஐ மாடல்களைப் பயன்படுத்தும்போது, அவற்றுக்கு ஒரு 'எமர்ஜென்சி பிரேக்' போன்ற கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்க வேண்டும்"என்றார்.

## சவுதி அரேபியா: விமான நிலையத்தின் மீது தாக்குதல்; 9 பேர் பலி, 300 பேர் காயம்

**ரியாத், அக்.12:** சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத்தில் உள்ள கிங் காலித் சர்வதேச விமான நிலையம் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 12 பேர் பலியாகியதோடு 300 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பொது விமானப் போக்குவரத்து அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை (அக். 11) தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் அமெரிக்கா, எகிப்து, ஜோர்டான், சிரியா, பாலஸ்தீனம் மற்றும் சூடான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் பலியாகியதாகவும் காயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

## டில்லி போராட்டம்: சட்டவிரோதமாக யாரையும் கைது செய்யக்கூடாது: உச்ச நீதிமன்றம் உத்தரவு

**புதுடில்லி, அக்.12:** தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராக டில்லியில் நேற்று 'கரப்பான் பூச்சி ஜனதா கட்சி' சார்பில் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இதையொட்டி டில்லியில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. முக்கிய நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். டெல்லிக்கு வரும் ரயில்கள் ரத்து, மெட்ரோ நிலையங்கள் மூடல், பல்வேறு வழித்தடங்களில் போக்குவரத்து மாற்றம் மற்றும் ஆயிரக்கணக்கான போராட்டக்கா ரர்களை ஆங்காங்கே தடுத்து வைத்தல், கைது செய்தல் என பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த டெல்லி காவல்துறையும் பிற பாதுகாப்புப் படைகளும் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மத்திய அரசின் செயல்பாடுகள் நீதிமன்ற உத்தரவை மீறும் செயல் என மனுவில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கை, நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்சி மற்றும் வி. மோகனா ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு விசாரித்தது. அப்போது மனுக்களை பரிசீலனை செய்த நீதிபதிகள், பதில் மனு தாக்கல் செய்யும்படி மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். மேலும், போராட்டம் தொடர்பாக சில உத்தரவுகளை பிறப்பித்தனர். நீதிபதிகள் கூறியதாவது:-

பொது அமைதிக்கு ஏற்படக்கூடிய இடைஞ்சல்களைக் கருத்தில் கொண்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 19-வது பிரிவின் கீழ், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டிய அவசியம் எழும் வரை, மெட்ரோ ரெயில் சேவைகள் வழக்கம்போல் இயங்க வேண்டும்.

போக்குவரத்து ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு, நகருக்குள் மக்கள் தடையின்றி செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். பொது அமைதி மற்றும் போக்குவரத்து நிலவரத்தைக் கருத்தில் கொண்டு, தடுப்புகளை அமைப்பதற்கான தேவை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

சட்டப்படி இணைய சேவைகள் எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து செயல்பட வேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு, நகருக்குள் மக்கள் தடையின்றிநடமாட அனுமதிக்கப்பட வேண்டும். சட்டவிரோதமாக யாரையும் கைது செய்யக்கூடாது. அமைதியான முறையில், ஆயுதங்கள் இன்றி மக்கள் கூடுவதைப் பொறுத்தவரை, தடை உத்தரவு அமலில் உள்ள பகுதிக்கு அப்பால் சட்டத்திற்குப் புறம்பான வகையில் எவரையும் தடுத்து வைக்கக்கூடாது.

உச்ச நீதிமன்ற வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் BNSS பிரிவு 163-ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு நீதி கிடைப்பதில் எந்தவித அச்சமும் ஏற்படாத வகையில், இந்தத் தடையை நீக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறோம்

இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

## இந்திய பைலட் ஸ்மித் மச்சார் மீது தாக்குதல்: விசாரணையை தொடங்கியது என்ஐஏ

**புதுடில்லி, அக்.12:** ஃபிளை துபாய் விமான சம்பவம் தொடர்பாக என்ஐஏ வழக்குப் பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளது.



செப்டம்பர் 30-ம் தேதி ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நோக்கிச் சென்ற ஃபிளை துபாய் விமானத்தை கடத்தி கட்டிடத்தின் மீது மோதி தகர்க்க முயன்றார் ஓமன் நாட்டை சேர்ந்த துணை பைலட் ஹமாம் அல் ஹமாமி. ஆனால் இந்திய பைலட் ஸ்மித் மச்சார், தனது உயிரை பணயம் வைத்து இந்த சதித் திட்டத்தை முறியடித்து,விமானத்தில் இருந்த 180 பேரின் உயிரைக் காப்பாற்றினார்.

அதே நேரத்தில் துணை பைலட் கோடாரியால் தாக்கியதில் பலத்த காயமடைந்த அவர், தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். உலகம் முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து ஐக்கிய அரபு அமீரகம் தீவிர விசாரணை நடத்தி வருகிறது. இஸ்ரேலும் தன் பங்குக்கு தனியாக விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், ஃபிளை துபாய் விமான கடத்தல் முயற்சி சம்பவம் தொடர்பாக இந்தியாவின் தீவிரவாத தடுப்பு அமைப்பான தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) விசாரணையை தொடங்கி உள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: வெளிநாட்டு மண்ணில் நடக்கும் தீவிரவாத சம்பவங்களில் இந்தியர்கள் பாதிக்கப்பட்டால் அதனை விசாரிக்கும் அதிகாரம் என்ஐஏ-க்கு உள்ளது. ஃபிளை துபாய் விமான கடத்தல் முயற்சி சம்பவத்தில் இந்திய குடிமகனான ஸ்மித் மச்சார் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தச் சம்பவத்தை விசாரிக்குமாறு உள்துறை அமைச்சகம் என்ஐஏ-க்கு உத்தரவிட்டது.

அதன் பேரில் கடத்தல் தடுப்புச் சட்டம், 2016-ன் பிரிவு 6 மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (உபா) ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைக்காக ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, இஸ்ரேல் அதிகாரிகள் மற்றும் ஃபிளை துபாய் நிறுவனத்திடமிருந்தும் தேவையான தகவல்கள் மற்றும் ஒத்துழைப்பை என்ஐஏ பெறும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

## யு.பி.ஐ. கட்டண வசூல் நடவடிக்கை: பணப்பரிவர்த்தனை பயன்பாடு குறையும் அபாயம்




**சென்னை, அக்.12:** தமிழகம் உள்பட நாடு முழுவதும் உள்ள கடைகள், ஓட்டல் கள், வணிக நிறுவனங்கள் என அனைத்து பகுதிகளிலும் யு.பி.ஐ. மூலம் பணப்பரிவர்த்தனை செய்வது அதிகரித்து வருகிறது. இதனால் ரூபாய் நோட்டுகளின் புழக்கம் குறையத் தொடங்கியுள்ளது. இத்தகைய பணப்பரிவர்த்தனை மூலம் சில்லறை பிரச்சினைக்கு முற்றிலும் தீர்வு காணப்பட்டது.

ரூபாயை கையில் எடுத்து செல்லும் தேவை இல்லாத நிலைய ஏற்பட்டது. டீக்கடை முதல் நகைக்கடை வரை யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனை உள்ளது. இவ்வாறு ரூபாய் நோட்டுகளை மறக்கும் வகையில் யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனை தற்போது வியாபாரிகள், மக்களிடையே பிரபலமாகி உள்ளது.

இந்த நிலையில் ரூ.2 ஆயிரத்துக்கு மேல் குறிப்பிட்ட வியாபார யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனைகளுக்கு 0.4 சதவீத கட்டணம் விதிக்கப்படும் என்ற மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு வியாபாரிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது. இந்த புதிய நடைமுறை வருகிற 15-ந் தேதி முதல் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அனைத்து யு.பி.ஐ. பரிவர்த்தனைகளுக்கும் கட்டணம் கிடையாது. தனிநபர் ஒருவர் மற்றொரு நபருக்கு அனுப்பும் பணத்துக்கு கட்டணம் இல்லை. ரூ.2 ஆயிரம் வரை நடைபெறும் சிறு வியாபாரிகளின் யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனைகளுக்கும் கட்டணம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ.3 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை ஒருவர் யு.பி.ஐ. மூலம் வாங்கினால் 0.4 சதவீத அடிப்படையில் வியாபாரியிடம் இருந்து சுமார் ரூ.12 கட்டணம் வசூலிக்கப்படும்.

தற்போது துணிக்கடைகள், மின்சாதன கடைகள், நகைக்கடைகள், பர்னிச்சர் கடைகள் போன்ற அதிக மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளில் வாடிக்கையாளர்கள் யு.பி.ஐ. மூலம் பெரிய தொகைகளை செலுத்துகின்றனர். இவ்வாறு செலுத்தப்படும் பரிவர்த்தனைக்கு ஏற்படும் கட்டணம், மாத இறுதியில் வியாபாரிகளுக்கு கூடுதல் செலவாக மாறும் என்று வியாபாரிகள் கவலையுடன் கூறுகின்றனர்.

மேலும் வாடிக்கையாளர்களிடம் இந்த கட்டணத்தை நேரடியாக வசூலிக்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதால், அந்த செலவை வியாபாரிகளே ஏற்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. யு.பி.ஐ. கட்டணத்தை வாடிக்கையாளர்களிடம் நேரடியாக வசூலிக்கக்கூடாது என்றாலும், வியாபாரிகளின் செலவு அதிகரிப்பதால் பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படுமா? என்ற கேள்வியும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அதே நேரத்தில், யு.பி.ஐ. பயன்பாடு குறைந்து மீண்டும் ரொக்கப் பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கூடுதல் சுமை:** யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனைக்கு கட்டணம் வசூலிப்பது தொடர்பாக வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:-

யு.பி.ஐ. தற்போது வியாபாரத்தில் தவிர்க்க முடியாத பணப்பரிவர்த்தனை முறையாக உள்ளது. சிறிய தொகை பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் இல்லாதது வரவேற்கத்தக்கது. ஆனால் அதிக தொகை செலுத்தும் வாடிக்கையாளர்களின் பரிவர்த்தனைகளுக்கு வியாபாரிகள் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், அது சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு கூடுதல் சுமையாக இருக்கும்.

மத்திய அரசு யு.பி.ஐ. பணபரிவர்த்தனைக்கு 0.4 சதவீத சேவை கட்டணத்தை வியாபாரிகள் தான் செலுத்த வேண்டும் என்று கூறினாலும், வியாபாரிகள் எப்படி வசூலிப்பார்கள் என்பது அரசுக்கு தெரியும். இது விலைவாசி உயர்வுக்கு வழிவகை செய்யும். எனவே கட்டணம் வசூலிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.









Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.